பதிவு எண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: கார்த்திகை 22 (8—12—71) புதன் வெளியூர்: கார்த்திகை 23 (9—12—71) வியாழன் [இதழ்: 147

'கோழிக் கழுத்து' என்ன ஆயிற்று?

ஜலந்தர், மார்ச் 8—

சாம்ப் பகுதியின் கிழக்கில் 'கோழிக் கழுத்து' என்று அழைக்கப்படும் ஒரு முக்கிய நகரை இந்திய வீரர்கள் கைப்பற்றினர்.

இதனைச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்த தளபதி காண்டத், 'அந்தக் கழுத்து இனி மேல் இல்லை; அதை, எனது பையன்கள் தின்றுவிட்டனர்' என்று வேடிக்கையாகக் கூறினார்.

போரை நிறுத்த ஐ. நா. தீர்மானம்

'ஏற்க முடியாது' என இந்தியப்பிரதிநிதி அறிவிப்பு

வங்காள தேச ஒப்புதலுடன் தீர்வு காண வற்புறுத்தல்

நியூயார்க், டிச. 8—

"இந்தியாவும்—பாகிஸ்தானும் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்துவிட்டுத் தத்தம் படைகளைத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும்" என்று கோரும் தீர்மானம், இன்று ஐ.நா. பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானத்துக்கு ஆதரவாக 104 வாக்குகளும், எதிராக 11 வாக்குகளும் கிடைத்தன; சோவியத் இரஷ்யாவும்—பூட்டானும் எதிர்த்து வாக்களித்தன; பிரிட்டனும் பிரான்சும் வாக்கெடுப்பிலிருந்து ஒதுங்கியிருந்தன.

வங்காள தேசப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வற்புறுத்துவது என்றும், ஐ.நா. மேற்பார்வையாளர்களை எல்லையில் நிறுத்த வகைசெய்ய வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி திரு. சாமர்சென் பேசுகையில், 'வங்காள தேச அரசின் ஒப்புதலைப் பெறாத எத்தகைய தீர்மானமும் ஏற்புடையதல்ல; அத்தகைய தீர்மானத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளாது' என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

"மேற்குப் பாகிஸ்தானின் அக்கிரம—அடக்குமுறைகளிலிருந்து வங்காள தேச மக்களை விடுவிப்பதற்கே போர் நடைபெறுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்படியும் ஒரு செய்தி

அமெரிக்க அதிபர் பாகிஸ்தான் வருகிறாராம்

இலண்டன், டிச. 8—

அமெரிக்க அதிபர் நிக்சன், பாகிஸ்தானுக்கு வருகைத் தரக்கூடும் என்ற பலமான வதந்தி ஒன்று இங்கு அடிபடுகிறது.

இது அநேகமாக நிக்சனின் சீனச் சுற்றுப்பயணத்தின் போது இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இதற்கான 'திகைக்க வைக்கும்' அழைப்பினை, அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் விடுத்திருக்கிறார் என்று 'டைம்' பத்திரிகை கூறுகிறது.

நிக்சனின் பாகிஸ்தான் பயணம், இரு பலன்களைத் தரக்கூடியதாகும் என்று கருதப்படுகிறதாம்.

யாகியா கானுடையவும்—இராணுவ ஆட்சியினுடையவும் இழந்துவரும் மன உறுதியை நிலைநிறுத்தவும், பாகிஸ்தானைப் பலமாக ஆதரித்துவரும் செஞ்சீனா மகிழ்ச்சியடையவும் இந்தப் பயணம் வழிவகுக்கும் என்று கருதுகின்றனராம்.

நிக்சனின் சீனப் பயணம் பயன் தரத்தக்க விதத்தில் அமையாது என்றும் கூறப்படுகிறது.

சீனத் தலைமையமைச்சர் சூ-என்-லாய், 'நிக்சனின் சீன வருகை காலத்தை வீணாக்கும் ஒரு செயலேயாகும்' என்று கருத்தறிவித்திருப்பது நினைவுகூரத்தக்கதாகும்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

சட்டப் பேரவையில் அமைச்சர் ப. உ. ச. தகவல்

சென்னை, டிச. 8—

"விலைவாசிகள் உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தக்கநடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது; எனவே, விலைவாசி விலைவாசி உயர்வைப் பற்றிச் சட்டப் பேரவையில் விவாதம் நடத்தத் தேவையில்லை"

என்று, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றின்மீது பேசுகையில் அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் இன்று சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வு பற்றி விவாதிக்கக் கோரி சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் பேரவைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் பொம்மை அரசு

அமீன் — பூட்டோ கூட்டாக அமைப்பராம்

புதுடில்லி, டிச. 8—

பாகிஸ்தானில் ஒரு கூட்டு ஆட்சி அமைக்குமாறு ஐக்கியக் கூட்டுக் கட்சித் தலைவர் நூருல் அமீனையும்—மக்கள் கட்சித் தலைவர் பூட்டோவையும் பாகிஸ்தான் சர்வாதிகாரி யாகியா கான் கேட்டுக்கொண்டிருக்கிறாராம்.

போர் காரணமாக இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதாக பாகிஸ்தான் வானொலி கூறியது.

கைப்பற்றப்பட்ட கப்பல்கள்

இந்தியத் துறைமுகத்துக்கு வருகின்றன

விசாகை, டிச. 8—

"பாகிஸ்தான் அரசு அமர்த்திக் கொண்டுள்ள மேலும் 6 கடலோரப் போக்குவரத்துக் கப்பல்களைக் கிழக்கு மண்டல இந்தியக் கடற்படைக் கப்பல்கள் கைப்பற்றின"

என்று கிழக்கு மண்டலக் கடற்படைத் தலைவர் வைஸ்—அட்மிரல் என். கிருஷ்ணன் கூறினார்.

கைப்பற்றப்பட்ட கப்பல்களைப் பாதுகாப்பில் வைப்பதற்காக இந்தியத் துறைமுகம் ஒன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட 2 கப்பல்களுடன் சேர்த்து வங்காள விரிகுடாவில் இதுவரை மொத்தம் 8 கடலோரக் கப்பல்கள் பிடித்துவைக்கப்பட்டுள்ளன.

கரிவலம்வந்தநல்லூர் துப்பாக்கிச் சூடு

'சட்டப் பேரவையில் விவாதிக்க தேவையில்லை' என முடிவு

சென்னை, டிச. 8—

"கரிவலம்வந்தநல்லூரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விவாதிக்கச் சட்டமன்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்கப்பட வேண்டும்"

என்று இன்று சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை பேரவைத் தலைவர் நிராகரித்தார்.

"இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக நீதிவிசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதால் அவையில் விவாதிக்கத் தேவையில்லை"

என்று பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் தமது தீர்ப்பில் கூறினார்.

இந்தத் தீர்மானத்துக்குப் பதிலளித்துப் பேசிய முதல்வர் கலைஞர், இச்சம்பவத்தின் தொடர்பாக தி. மு. க.—கம்யூனிஸ்டு ஆகிய இரு கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் போலீசார் கைது செய்துள்ளதாகவும், கட்சிப் பாகுபாடில்லாமல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

பூட்டான் அங்கீகாரம்

வங்க தேச அரசைப் பூட்டான் அங்கீகரித்துள்ளது.

இந்தியாவுக்கு அடுத்தபடியாக வங்க தேசத்தை அங்கீகரித்துள்ள நாடு பூட்டான்தான்.

பூட்டான் மன்னர் தமது நாட்டு அங்கீகாரத்தைத் தெரிவித்து வங்க தேச தற்காலிகக் குடியரசுத் தலைவர் நஸ்ருல் இஸ்லாத்துக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளது.

'சட்டப் பேரவைத் தலைவரின் உரிமை மீறப்படவில்லை'

எதிர்க் கட்சியினர் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை தள்ளுபடி

சென்னை, டிச. 8—

சட்டமன்றம் கூடும் தேதியில் மாற்றம் செய்து அறிவிக்கப்பட்டதில், சட்டப்பேரவைத் தலைவரின் உரிமையில் தலையீடு நிகழ்ந்திருப்பதாகக்கூறி உரிமைப் பிரச்சினை ஒன்றை கம்யூனிஸ்டுக் கட்சி சார்பில் இன்று சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்டது.

இதற்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பதிலளித்துப் பேசுகையில், சட்டமன்றம் இன்ன தேதியில் கூடும் என்று தாம் செய்தியாளர்களிடம் கூறவில்லையென்றும், தேதியை மாற்றிவைப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது என்றே தாம் கூறியதாகவும் கூறினார்.

இதில் பேரவைத் தலைவரின் உரிமை ஏதும் மீறப்படவில்லை என்றும், சட்டமன்றத்தைக் கூட்டுவதற்கான தேதி பற்றிய சாத்தியக் கூறைத்தான் முதல்வர் தெரிவித்ததாகவும் கூறி, பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன், உரிமைப் பிரச்சினையைத் தள்ளுபடி செய்தார்.

பதுக்கல் செய்த வணிகர்கள் கைது

ரூ. 20 இலட்சம் மதிப்புள்ள சரக்குகள் பறிமுதல்

கல்கத்தா, டிச. 8—

இன்றியமையாப் பொருட்களைப் பதுக்கிய குற்றத்துக்காக சுமார் 450 வணிகர்கள் நேற்று வங்கத்தில் பல இடங்களில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிடமிருந்து ரூ. 20 இலட்சம் மதிப்புடைய பொருட்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

தஞ்சையில் கைதான மாணவர்கள் விடுதலை

சட்டப் பேரவையில் முதலமைச்சர் அறிவிப்பு

சென்னை, டிச. 8—

தஞ்சையில், 18 வயது உள்ளவர்கட்கும் வாக்குரிமை கோரி ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து சட்டப் பேரவை நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை பேரவைத் தலைவர் ஏற்கவில்லை.

அங்கு கைது செய்யப்பட்ட மாணவர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டதாகவும், அதைப் பற்றி விவாதிக்க எதுவுமில்லை என்றும் முதலமைச்சர் கலைஞர் விளக்கமளித்தார்.

வாழ்க—வங்க தேசம்!

"வங்காள தேச'த்தை அங்கீகரித்துவிட்டது இந்தியா; வங்க தேச மக்களும் இந்தியா மக்களும் குதூகலத்துடன் இந்தச் செய்தியை வரவேற்று மகிழ்கின்றனர். அரசியல் விவேகமும்—சனநாயகப் பண்பும் கொண்ட பிறநாட்டு மக்களும் இதனை வரவேற்றே தீருவர்!

இந்தியாவைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் வங்க தேசத்தை அங்கீகரிக்க முன்வரக்கூடும் என்று நம்புகிறோம். 'யார் பூனைக்கு மணி கட்டுவது?' என்பதுபோல், யார் முதலில் அங்கிகரிப்பது என்றுதான் ஒவ்வொரு நாடும் தயக்கம் காட்டிவந்தன!

'அந்த நல்ல காரியத்தை நானே முதலில் செய்கிறேன்' என்று துணிந்து செய்து காட்டிவிட்டார்—நமது தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள்!

'வங்க தேசத்தை அங்கீகரிப்பதே நியாயம்' என்ற கருத்துக் கொண்ட நாடுகள் அனைத்தும் இனித் தயக்கம் காட்டத் தேவையில்லை—துணிந்து அங்கீகரிக்கலாம்!

தனிச் சுதந்தர வங்க தேச அரசை கிழக்கு வங்க மக்கள் நிறுவிப் பல மாதங்கள் ஆகின்றன; ஒரு மாந்தோப்பில் கூடிப் பிரகடனப்படுத்தப்பட்ட சுதந்தர வங்க தேச அரசு, இன்று ஏழரைக் கோடி வங்காள மக்களின் அரசாக—55 கோடி இந்திய மக்களால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது; இனி 'கிழக்குப் பாகிஸ்தான்' என்ற பெயரே உலகப் படத்திலிருந்து மறைந்துவிடும்!

பாகிஸ்தானின் பெரும்பான்மையான மக்கட்தொகையைக்கொண்ட நிலப்பரப்பு, பாகிஸ்தானிலிருந்து விடுபட்டுத் தனிநாடாகிவிட்டது; எஞ்சியிருக்கும் பகுதியையாவது பாகிஸ்தான் அரசு பத்திரமாகக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், அதன் போக்கிலே மாறுதல் ஏற்பட்டாக வேண்டும்; இன்றுள்ள நிலையே நீடிக்குமானால், பின்னர், 'பாகிஸ்தான்' என்ற பெயரே உலக வரலாற்றிலிருந்து அகலும் நிலை நிச்சயம் வந்தே தீரும்! மேற்குப் பாகிஸ்தானில் உள்ள சிந்து மக்களும்—பட்டாணியர்களும் இப்பொழுதே தனிநாடுகேட்டுக் கிளர்ச்சி செய்துவருகிறார்கள். அவர்கள் கை வலுக்குமானால், அங்கும் 'வங்கம்' உருவெடுக்கும். அதன்பின், 'இராவல்பிண்டி'யும்—'இஸ்லாமாபாத்'தும் அனாமதேயங்களாகிவிடும்!

இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து, இனியாவது பாகிஸ்தான் சர்வாதிகாரி புத்திசாலித்தனமாக நடந்துகொள்வார் என எதிர்பார்க்கிறோம். அவருக்கு நெருக்கமாகவுள்ள பூட்டோவும்—நூருல் அமீனும், சந்தடி சாக்கில், 'பதவி எலும்புத்துண்டு கிடைத்தால் போதும்' என்று இன்று திருப்தியடையலாம்; காலப்போக்கில் அங்கேயும் 'முஜிபுர் ரகிமான்'கள் தோன்றமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

"சுதந்தர வங்காளதேச அரசு, மதச் சார்பற்ற—சனநாயக—சமதர்மக் குடியரசாக விளங்கும்" என்று அறிவிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. சாதி—சமய வேற்றுமைகள் இன்றி, வங்காள மொழி—கலாச்சார—மண்பாட்டு அடிப்படையில் புதிய அரசு இயங்கவிருக்கிறது.

எந்த ஒரு முஸ்லிம் நாடும் இப்படி ஒரு பிரகடனத்தைச் செய்ததில்லை; மதச் சார்பற்ற தன்மையோ—சனநாயக முறையோ—சமதர்மக் கோட்பாடோ எந்த முஸ்லிம் நாட்டிலும் முழு அளவில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; மதச் சார்புடனும், மத வெறியுடனும் இயங்கிவந்த ஒரு முஸ்லிம் நாட்டிலிருந்து பிரிந்த வங்க தேச மக்கள், தங்கள் ஆட்சியை, மதச் சார்பற்ற—சனநாயக—சமதர்ம—மக்கள் குடியரசாக ஆக்கிக்கொண்டிருப்பது உலகிலேயே இதுதான் முதலாவதாகும்!

இனி, வங்கதேசத்தின் தலைவர் யாகியா கான் அல்ல—அந்தக் கொடுங்கோலனால் சிறைப்பிடித்து வைக்கப்பட்டுள்ள ஷேக் முஜிபுர் ரகிமானே ஆவார்!

வங்க தேச மக்களின் மாபெரும் தலைவரும்—சனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்சித் தலைவருமான ஷேக் முஜிபுர் ரகிமானை மரியாதையாக விடுதலை செய்து அவருடைய நாட்டுக்கு அனுப்பிவைப்பதே யாகியா கானின் கடமையாகும்; இந்தக் கடமையை அவர் செய்யத் தவறினால், உலகம் பார்த்துக்கொண்டு வாளாவிருக்காது; சரியான புத்தி புகட்டத் தயங்காது என்பதை அந்த மகானுபாவர் உணர்ந்து வழிக்கு வந்தாகவேண்டும்.

திரு. முஜிபுர் ரகிமான், இன்று, யாகியா கானின் கிரிமினல் கைதியாக பூட்டிய இரும்புக் கூட்டில் அடைபட்டிருக்கலாம்; ஆனால், அவர் ஏழரைக் கோடி மக்களின் முடிசூடா மன்னராகிவிட்டார் என்பதை, மத வெறியும்—இனக்கொலை வெறியும் கொண்ட மதோன்மத்தர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முஜிபுர் ரகிமானின் உயிருக்கு உலைவைக்கப்படுமானால், அடுத்த நிமிடமே வங்கம் பொங்கியெழுந்து மேற்குப் பாகிஸ்தானையே அழித்துவிடும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு எதிராக மக்களைத் திரட்டி—அவர்கட்கு விடுதலையுணர்ச்சியையூட்டி எழுச்சி பெறச் செய்து, வங்க தேசத்தின் தனிப் பெரும் தலைவராகத் திகழும் ஷேக் முஜிபுர் ரகிமான், உலகப் புரட்சி வீரர்களில் ஒருவராகிவிட்டார்! வரலாற்றில் அழியாப் புகழைத் தேடிக்கொண்டுவிட்டார்!

வங்க தேசத்தை முதன் முதலாக அங்கீகரித்து மற்ற நாடுகட்கெல்லாம் வழிகாட்டிய—வல்லரசுகளுக்கெல்லாம் புத்தி புகட்டிய இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையாரை மனமாரப் பாராட்டுகிறோம். வங்க தேச அரசு இந்தியாவின் சகோதர நாடாக என்றும் திகழ்ந்து, எல்லா வளமும் நலமும் எய்தி வாழ வேண்டும் என வாழ்த்துகிறோம்.

வாழ்க—வங்க தேசம்!

—மா. செ.

சேலம் உருக்காலையும் நெய்வேலி நிலக்கரியும்

தமிழக அரசின் நிலை விளக்கம்

சென்னை, டிச. 7—

"நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தித்தான் சேலம் உருக்காலை அமைக்க வேண்டும் என்பதை அரசு ஒப்புக்கொள்ளவில்லை; வெளிமாநிலத்திலிருந்து தருவிக்கப்படும் நிலக்கரியைப் பயன்படுத்தியாவது சேலம் உருக்காலையைத் துவக்க வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் கருத்தாகும்"

என்று சட்டப் பேரவையில், தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் விளக்கிக் கூறினார்.

நெய்வேலி நிலக்கரியில் கந்தகச் சத்து அதிக சதவிகிதம் இருப்பதால் அதைப் பயன்படுத்திச் சேலம் உருக்காலை அமைப்பது இயலக்கூடியதல்ல—என்று நிபுணர் குழு அறிக்கை கூறுவதாக வந்த செய்தி குறித்து சட்டப் பேரவையில், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொண்டுவந்தனர்; 'இதனால் சேலம் உருக்காலை அமைப்பு காலதாமதமாகாதா? செலவு அதிகமாகாதா?" என்று தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினர்கள் வினவினர்.

தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பதிலளிக்கையில் மேலும் கூறியதாவது:—

"நெய்வேலி நிலக்கரியில் கந்தகச் சத்து அதிகரித்து காணப்பட்டது என்று நிபுணர்கள் கூறியது உண்மைதான்; இதனால் சேலம் உருக்காலைத் திட்டம் நிறைவேறுவதில் காலதாமதம் கூடாது என்று மத்திய அரசிடம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

"அதே நேரத்தில், நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தித்தான் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதை ஒப்புக்கொள்வதற்கில்லை.

"நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்ட வேண்டியதன் அவசியத்தை மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறது'

"சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு ஆபத்து இல்லை; அது எப்படியும் வரும்"

என்று மத்திய உருக்கு அமைச்சர் கூறியிருப்பதையும் அமைச்சர் மாதவன் சுட்டிக்காட்டினார்.

வேலை தேடுவோர் எண்ணிக்கை

ஓராண்டில் 23 சதவிகிதம் அதிகரிப்பு

புதுடில்லி, டிச. 3—

"வேலை தேடுவோர் எண்ணிக்கை 1971 ஆகஸ்டுடன் முடியும் ஓராண்டுக் காலத்தில் 35இலட்சத்திலிருந்து 48 இலட்சமாக அதிகரித்துள்ளது"

என்று தொழிலாளர் அமைச்சர் காடில்கர், மக்களவையில் தெரிவித்தார்; அதாவது, 'சுமார் 23சதவிகிதம் அதிகரித்துள்ளது' என்றார்.

தமிழக முதலமைச்சர் திரட்டும்...

போர் நிதி குவிகிறது

சென்னை, டிச. 8—

இந்தியா—பாகிஸ்தான் போரைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் திரட்டும் யுத்த நிதிக்கு நன்கொடைகள் குவிகிறது; போர் நிதிக்கு, நேற்று வரை நிதி வழங்கியவர்கள் விவரம் வருமாறு:—

ஆனைமலை டிரேடிங் கம்பெனி, திருச்சி	ரூ.	10,001.00
ஏ. ஆர். தாமோதரன் எம்.எல்.சி.	ரூ.	2,500.00
ஜி. வசந்தபாய் எம்.எல்.சி.	ரூ.	1,500.00
அமைச்சர் செ. மாதவன்	ரூ.	500.00
குன்றக்குடி அடிகளார் எம்.எல்.சி.	ரூ.	500.00
சா. கணேசன் எம்.எல்.சி.	ரூ.	250.00
ஈரோடு சின்னசாமி எம்.எல்.ஏ.	ரூ.	101.00
சத்தியேந்திரன் எம்.எல்.ஏ.	ரூ.	101.00
தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கம், சென்னை	ரூ.	101.00
கலைஞர் இல்லத்தில் நேற்று பொதுமக்கள் அளித்தது	ரூ.	40.00
அமெரிக்கச் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு கலைஞர் அவர்கள் சென்னை திரும்பியபோது விமான நிலையத்தில் பொதுமக்கள் அளித்தது (அத்துடன் ஒரு தங்க மோதிரமும்)	ரூ.	328.00
மொத்தம்	ரூ.	15,922.00

பாகிஸ்தானுடன் அஞ்சல்—தந்தித் தொடர்புகள் துண்டிப்பு

புதுடில்லி, டிச. 7—

பாகிஸ்தான் நாட்டுடன் எல்லா அஞ்சல்—தந்தி—தொலைபேசித் தொடர்புகளும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

"பாகிஸ்தானுக்குக் கடிதங்கள்—பார்சல்கள்—மணியார்டர்கள்—தந்திகள் ஆகியவற்றை அனுப்பவேண்டாம்" என்று அஞ்சல்-தந்தித் தலைமை இயக்குநர் பொதுமக்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானுக்கு அனுப்புவதற்காக ஏற்கனவே பொதுமக்கள் அனுப்பிவிட்ட பொருள்களும், தந்திகளும் இந்தியாவை விட்டு அனுப்பப்படாமல் இருந்தால் முடிந்தவரையில் அவை பொது மக்களுக்குத் திருப்பியனுப்பப்படும்.

தி. மு. க.

தலைமைச் செயற்குழு அவசரக் கூட்டம்

12—12—71 ஞாயிறு அன்று சென்னையில் நடைபெறும்

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைச் செயற்குழுவின் அவசரக் கூட்டம், 12—12—71 ஞாயிறு காலை 10-மணிக்கு சென்னை—அண்ணா சாலை சட்டமன்ற தி. மு. க. கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் தலைமையில் நடைபெறும்; அதுபோது, 'பாகிஸ்தான் படையெடுப்பும் நமது கடமையும்' என்ற பொருள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

'அறிவகம்'
சென்னை-13
6-12-1971

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

இந்து—முஸ்லிம் தகராறு அல்ல; இரு தத்துவங்களுக்கிடையே நடைபெறும் போர் இது!

சென்னை, டிச. 8—

"பாகிஸ்தான் இந்தியாமீது, தொடுத்திருக்கின்ற இந்தப் போர், 'ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது தொடுத்திருக்கின்ற போர்' என்று கருதுவதைக் காட்டிலும், 'ஒரு தத்துவம் இன்னொரு தத்துவத்தின் மீது தொடுத்திருக்கின்ற போர்' என்று சொன்னால் அது மிகையாகாது!

"சர்வாதிகார மனப்பான்மையுடன்—சர்வாதிகாரக் கொள்கையுடன் வெறிபிடித்து அலைந்து கொண்டிருக்கின்ற பாகிஸ்தான் சர்வாதிகாரி, இந்தியாவில் நாம் கட்டிக்காத்து வருகின்ற சனநாயகத் தத்துவத்தின்மீதும்—நம்முடைய வாழ்க்கை முறையின்மீதும்—நம்முடைய மதச் சார்பற்ற கொள்கையின்மீதும் இன்றைக்குப் படை எடுத்திருக்கிறார் என்று நாம் திட்டவட்டமாகக் கூறவேண்டும்.

"அமெரிக்க நாட்டுக்கு நான் சென்றிருந்த நேரத்தில், அங்கே ஒரு தவறான பிரச்சாரம்—பாகிஸ்தான் தொடுத்திருக்கின்ற போர் பற்றிப் பத்திரிகைகளில் கட்டுரை வாயிலாகச் செய்யப்படுவதை நேரில் காண்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; 'இந்தியாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டிருக்கின்ற இந்தத் தகராறு, இன்று நேற்று அல்ல—பல நூற்றாண்டுக் காலமாக இந்துக்களுக்கும்—முஸ்லிம்களுக்கும் இடையே இருந்து வருகின்ற தகராறின் மற்றொரு கட்டம்தான் இந்தப் போராட்டம்' என்று அந்த நாட்டிலுள்ள சில பத்திரிகைகளில் வர்ணிக்கப்பட்டிருந்தது.

சில நிருபர்களைச் சந்தித்த நேரத்தில், 'அது தவறு' என்பதற்கான விளக்கங்களை அளிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது; 'இது இந்து—முஸ்லிம் தகராறு அல்ல; இந்தியாவில் இன்றைக்கு முஸ்லிம்களே இல்லாமல் இல்லை; குறிப்பாகச் சொல்லப்போனால், இந்தியாவில் இருக்கின்ற முஸ்லிம்களுடைய தொகை இன்றைக்குப் பாகிஸ்தானில் இருக்கின்ற முஸ்லிம்களின் எண்ணிக்கையைவிட அதிகமானது; அந்த அளவுக்குப் பாகிஸ்தானைவிட இந்தியாவில் அதிகமான முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்; அவர்களுடைய உரிமைகள் மதிக்கப்படுகின்றன; அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன; அவர்கள் அனைவருமே 'இந்து முஸ்லிம்கள்' என்கின்ற அளவில் இல்லாமல், 'இந்தியர்கள்' என்ற அளவில் ஒன்றுபட்டு—இந்த நாட்டினுடைய சுதந்தரத்தைக் காப்பாற்றுவதிலும், இந்த நாட்டுக்கு வருகின்ற ஆபத்துக்களைத் தவிர்ப்பதிலும் முன்னிற்கின்றார்; ஆகவே, இப்போது நடைபெறுகின்ற இந்தப் போராட்டம், இந்துக்களுக்கும்—முஸ்லிம்களுக்கும், இந்துக்களுடைய நாட்டுக்கும்—முஸ்லிம்களுடைய நாட்டுக்கும் நடைபெறுகின்ற போராட்டம் என்று யாரும் கற்பனைகூடச் செய்துகொள்ளத் தேவையில்லை' என்று விளக்கிச் சொன்னேன்.

"இந்தத் தெளிவான விளக்கத்தை இந்தப் பேரவையிலும் நாம் அனைவரும் கொள்வதோடு, வெளியிலும் வற்புறுத்திக் கூறுவது நீண்ட நெடுங்காலமாக நாம் ஏற்படுத்தியிருக்கின்ற வகுப்பு ஒற்றுமையை இந்த நேரத்தில் நிலைநிறுத்தப் பயன்படும்; போர் சூழ்நிலையைப் பயன்படுத்தி வகுப்பு ஒற்றுமைக்கு உலைவைக்கின்ற முயற்சியை முறியடிக்கும் வகையிலும் இது அமையும்."

மக்களின் கடமை

"இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியைப் போர் வீரர்கள் மட்டும் சமாளித்துவிடுவார்கள் என்று நாம் கைகட்டி வாளாயிருத்தல் கூடாது—அப்படி இருக்கவும் முடியாது; இந்திய நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் நெருக்கடிப் பொறுப்புக்களை உணர்ந்தாக வேண்டும்.

"போர்க் கருவிகளைப் புதிது புதிதாக வாங்குவதற்கும்—போர்த் தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கும் ஏராளமான பணம் தேவைப்படும்; அதை அட்டியின்றித் தருவதற்கும் இந்தியாவில் இருக்கின்ற ஒவ்வொரு குடிமகனும் தயாராக இருக்கவேண்டும்—அதில் தயக்கம் காட்டக்கூடாது.

"அதிலும், தமிழகம் இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்றும்—தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்கள்மீதும் நம்பிக்கை வைத்து—இதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்; போருக்கான நிதியைத் திரட்டுகிற பணியைத் தொடங்கவேண்டும்.

"போர் வீரர்களுக்குத் தேவைப்படுகின்ற மருந்துகளை வாங்கிப் போர்முனைகளுக்கு அனுப்புதல்—தேவையான உடைகளை வாங்கி அனுப்புதல்—போர்முனைக்குச் சென்று போரில் ஈடுபட்டிருக்கும் வீரர்களின் குடும்பங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருதல் ஆகிய காரியங்களில் நாட்டில் உள்ள நல்லவர்கள் ஈடுபட வேண்டும்.

"இப்போது நாம் நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறோம்; இந்த நெருக்கடி இந்தியாவுக்கு மட்டுமல்ல—சனநாயகத்திற்கே நெருக்கடியானது! 'இந்தப் போர்தான் கடைசிப் போர்' என்கிறார் பாகிஸ்தானின் சர்வாதிகாரி! அவர்களுடைய முடிவை முன்கூட்டியே அவர் சொன்னதற்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்!

"'பாகிஸ்தான் இனி இந்தியாவின் மீது மட்டுமல்ல—வேறு எந்த நாட்டின்மீதும் போர் தொடுக்கவேண்டும் என்ற எண்ணம் எழாமல் இருக்கவேண்டும்' என்பதைச் செய்யவேண்டுமென்கின்ற கடமையுணர்வு இந்திய நாட்டுக்கு இருக்கிறது; நாம் அதைத் தமிழ்நாட்டின் சார்பிலே தரவேண்டும்—தரவும் வேண்டும்—தருவோம்.

இலாபமடிக்கப் பார்க்காதீர்—தியாகம் செய்ய முன் வருவீர்!

"நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்—சென்ற உலகப் போரின்போது சாதாரணமாக ஏழையாக இருந்த ஒருவர் பெரும் பணக்காரராகி—'எப்படி வசதி' என்றால், 'யுத்தத்தில் நன்றாகச் சம்பாதித்துவிட்டார்' என்பதாக ஒரு அடைமொழியைச் சேர்த்துச் சொல்லப்பட்டதை எல்லாம்!

"நாம் இந்தத் தடவை அத்தகைய அடைமொழியைப் பெறக் கூடாது; இந்தத் தடவை, 'யுத்தத்தில் கரமிழந்தார்—கால் இழந்தார்; நிறையத் தியாகம் செய்தார்' என்கின்ற புகழை ஈட்டிக்கொள்ள வேண்டுமேயல்லாது, 'யுத்தத்தில் சம்பாதித்துவிட்டார்' என்கின்ற அடைமொழியைப் பெறுகின்ற அளவுக்கு, 'அந்தஸ்து' தோன்றுவதற்கு இடமளிக்கக் கூடாது!

"அதில் தமிழ்நாட்டு அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்து—கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்."

—முதலமைச்சர் கலைஞர்
(சட்டமன்றத்தில்)

எதிரியின் 25 ஆண்டுக் கால நடவடிக்கைகள்

புதுடில்லி, டிச. 7—

இந்தியா சுதந்தரமடைந்து 25 ஆண்டுகள் ஆகின்றன; இந்த 25 ஆண்டுகளில், இந்தியாமீது பாகிஸ்தான் என்னென்னவிதமான துரோகத் தாக்குதல்களை நடத்தியுள்ளன என்பதன் விவரம் இங்கு தரப்படுகிறது:—

1947 அக்டோபர்:— பாகிஸ்தானைச் சேர்ந்த ஆதிவாசிகள், காஷ்மீர்மீது தாக்குதல் நடத்தினர்; பாகிஸ்தான் இராணுவத்தினர் இவர்களைத் தூண்டிவிட்டு—அவர்களுக்கு உதவி புரிந்தனர்.

1948 மே:—முறைவான பயிற்சி பெற்ற பாகிஸ்தான் இராணுவத்தினர், 3 பட்டாளம் (பிரிகேட்) நிறைய காஷ்மீரில் தங்கியிருப்பது உண்மைதான் என்பதைப் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டது.

1956 சனவரி:— இந்தியாவின் வட மேற்கு எல்லையில், 'கட்ச்-ரண்' பகுதியில் உள்ள 'சாட்' என்னுமிடத்தில் பாகிஸ்தான் துருப்புக்கள் நுழைந்தன; பிப்ரவரி 25-ந் தேதியன்று நமது படைகள் அங்கே நுழைந்து—பாகிஸ்தான் துருப்புக்களை விரட்டியடித்தன.

1965 சனவரி:—கட்ச்-ரண் பகுதியில் உள்ள கஞ்சர் கோட் பகுதியைப் பாகிஸ்தான் ஆக்கிரமித்தது

1965 ஏப்ரல் 9:—கட்ச் பகுதியில், 'சர்தார் என்னும் இடத்திலுள்ள இந்திய எல்லைக் காவல் நிலையம் மீது பாகிஸ்தான் திடீரென்று முழுத் தாக்குதல் நடத்தியது; டாங்கிகள்—பீரங்கிகள் இந்தத் தாக்குதலில் பயன்படுத்தப்பட்டன. (ஆனால், 1965 ஜுன் 30-ந் தேதி இருதரப்பிலும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது; அதன்படி, கட்ச் பகுதியில் 1965 சனவரி 1-ந் தேதியன்று, அப்பகுதியில் இருந்த நிலவரத்தைத் தொடர்ந்து கடைபிடிக்க வேண்டும் என்று முடிவானது.)

1965 ஆகஸ்டு 5:— சாதாரண மக்களைப்போல உடையணிந்து ஆயிரக்கணக்கான பாகிஸ்தான் துருப்புக்கள், காஷ்மீரில் போர் நிறுத்தக் கோட்டைத் தாண்டி உட்புகுந்தன; கொள்ளை—கொலை மற்றும் பிற நாச வேலைகளில் ஈடுபட்டனர்.

1965 செப்டம்பர் 1:— இந்தியாவின் மேற்கு எல்லையில், சாம்ப்-ஜௌரியன் பகுதியில், பாகிஸ்தான் படையினர் 70 டாங்கிகளுடன் உட்புகுந்து தாக்கினர்; இதைத் தொடர்ந்து மேற்கு எல்லை நெடுகிலும் தாக்குதல்கள் நடந்தன.

1971 சனவரி 30:— பாகிஸ்தானி கைக்கூலிகள் 2 பேர், இந்தியன் ஏர் லைன்ஸ் விமானத்தை ஸ்ரீநகரிலிருந்து லாகூருக்குக் கடத்தினர்; அங்கே அந்த விமானம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது.

1971 ஆகஸ்டு:— நமது கிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள எல்லைக் காவல் நிலையங்கள்மீது பாகிஸ்தான் துருப்புக்கள் பீரங்கிகளால் சுடத் துவங்கின.

1971 டிசம்பர் 3:—இந்திய விமானத் தளங்களைப் பாகிஸ்தான் படை விமானங்கள் தாக்கின; நமது எல்லைக் காவல் நிலையங்கள்மீதும் குண்டுவீச்சு நடைபெற்றது.

1971 டிசம்பர் 4:—பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் இந்தியாமீது போர்த் தொடுப்பதாக முறையாகப் பிரகடனம் செய்தனர்.

போர் முனையில் உயிரிழந்த—உடல் ஊனமுற்ற தமிழ்நாட்டு வீரர்கள் குடும்பங்களுக்கு உதவி

முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை டிச. 8—

"போர் முனையில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு ரூ. 5000-மும்—மூன்று மூன்று ஏக்கர் புஞ்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலமும் கொடுப்பது என்று தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், சட்டமன்ற மேலவையில் அறிவித்தார்.

சட்டமன்ற 82-வது விதிகளின்படி, மேலவையில் வெளியிட்ட அறிக்கையில் முதலமைச்சர் மேலும் கூறியதாவது:—

"போர்க் களத்தில் தமிழ்நாட்டு வீரர்கள் பெரும்பாலோர் நாடு காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்களில் போரில் பாதிக்கப்பட்டோர்—கை கால் இழந்தோர்—உயிரிழந்தோர் ஆகியோரின் குடும்பங்களைக் காப்பாற்றத் தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது.

"போரில் இறந்தோர் குடும்பத்தினருக்கும், உடல் ஊனமுற்றுப் பணியாற்றிடத் தகுதி இழந்தோர் குடும்பத்தினருக்கும் ரூ. 5000-மும்—மூன்று ஏக்கர் புன்செய் அல்லது ஒன்றரை ஏக்கர் நன்செய் நிலமும் தமிழக அரசின் சார்பில் கொடுக்கப்படும்; அவர்கள் வீட்டுக் குழந்தைகளின் படிப்புச் செலவையும், உடைகளுக்கான செலவையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.

வீரச் செயல் புரிந்தோருக்கு உதவி அதிகரிப்பு

வீர விருதுகள் பெறுவோருக்குத் தமிழக அரசு பொற்கிழி (பண முடிப்பு) அளிக்கிறது.

போரில் வீரச் செயல் புரிந்ததற்காக 'பரம வீரச் சக்கர' விருது பெற்ற தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை ரூ. 10 000 அளிக்கப்பட்டு வந்தது; இத்தொகை, இனி, ரூ. 15 000-ஆக உயர்த்தி அளிக்கப்படும்.

'மகாவீர' விருது பெற்றவர்கட்கு அளிக்கப்பட்ட ரூ. 7,500-இனி ரூ. 10,000-ஆக அளிக்கப்படும்.

வீர சக்கர' விருது பெற்றவர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டுவந்த ரூ. 3,000 இனி ரூ. 5,000-ஆக உயர்த்திக் கொடுக்கப்படும்.

'சேனா' விருது பெற்றவர்கட்கு இதுவரை பொற்கிழி அளிக்கப்படவில்லை; இனி அவர்களுக்கும் ரூ. 3,000 வழங்கப்படவிருக்கிறது."

தொழில் தகராறு திருத்த மசோதா

புதுடில்லி, டிச. 7—

தொழில் தகராறுகள் இரண்டாவது திருத்த மசோதாவை நாடாளுமன்ற மேலவையில் தொழிலாளர் நல அமைச்சர் காடில்கர் கொண்டுவந்தார்.

இதன்படி ஒரு தொழிற்சாலையை மூடுவதாக இருந்தால், அதற்குக் குறைந்தபட்சம் 60 நாட்களுக்கு முன்னறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

"இந்தியத் தொழிலாளர்கள் நல மாநாட்டின் பரிந்துரையைச் செயல்படுத்துவதற்காக மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது" என்று நோக்கங்கள்—காரணங்கள் பற்றிய அறிக்கை கூறுகிறது.

"இம்மாதிரி தொழிற்சாலைகளை மூடுவதைத் தடுப்பதற்கான பரிகார நடவடிக்கைகள் எடுப்பதற்கு 60 நாட்கள் முன்னறிவிப்பு அவசியம் எனக் கருதப்பட்டது" என்றும் அது கூறுகிறது.

கட்டடங்கள்—கால்வாய்கள்—அணைகள்—இதர கட்டுமான வேலைகளுக்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள்—50 பேருக்குக் குறைவாகப் பணியாற்றும் சிறிய தொழிற்சாலைகள் இம்மாதிரி முன்னறிவிப்பு கொடுக்கவேண்டியது இல்லை.

இம்மாதிரி முன்னறிவிப்புக் கொடுக்காமல் மூடப்படும்தொழிற்சாலைகளுக்குத் தண்டனை விதிக்கவும் மசோதா வகைசெய்கிறது.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி

ரூ. 2,001 நன்கொடை

சென்னை, டிச. 8—

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குச் சரூர் நிலவள வங்கி கிளையினர் ரூ. 2,001 நன்கொடை வழங்கினர்; இதற்கான 'செக்'கை, நேற்று முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினர்.

இந்திய இராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாடு சமூக சேவைக் குழு உதவி

பயன்படும் பொருள்களை சென்னையிலிருந்து இலவசமாக அனுப்ப ஏற்பாடு

குறிக்கோள்கள் பற்றி அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, டிச. 8—

ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து, எல்லைப் பகுதிகளில் வீரப் போரில் ஈடுபட்டிருக்கும் இந்திய வீரர்களுக்குப் பிளேடு—சிகரெட்டு—பனியன்—முறுக்கு—லட்டு—மப்ளர்—ஊறுகாய்—பிஸ்கட் போன்றவைகளை அனுப்பி வைப்பதற்குத் தமிழ்நாடு சேவைக் குழு ஏற்பாடு செய்து வருகிறது.

பரிசுப் பொருள்களைத் திரட்டுவதற்கும்—'கேன்டீன்'கள் நடத்துவதற்கும்—குருதி சேமிப்புக்கும்—இராணுவ வீரர்களின் குடும்ப நலனைக் கவனித்துக் கொள்வதற்கும் தனித் தனியே குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவ வீரர்களுக்கு உதவி செய்வதற்கு மகளிர் தயாராக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக, 'மகளிர் ஊர்வலம், ஒன்று நடைபெறும்; இந்த ஊர்வலத்தில், முதலமைச்சரின் துணைவியார் தயாளு அம்மாள், கல்வியமைச்சரின் துணைவியார் விசாலாட்சி அம்மாள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

டிச. 13ம் நாளை 3-மணியளவில் இந்த ஊர்வலம், இரா ஜாஜி மண்டபத்திலிருந்து புறப்பட்டுக் கடற்கரையில் முடிவுறும்.

தமிழ்நாடு சமூக சேவைக் குழுவின் கூட்டம், நேற்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமைதாங்கினர்.

கூட்டத்தில், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் சபாநாயகம், போலீசுக் கமிஷனர் கே. ஆர். ஷெனாய், திருமதி தயாளு அம்மாள், திருமதி விசாலாட்சி அம்மாள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்து எல்லைப்புறங்களில் நமது வீரர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள்; அங்கே சென்று நம்மால் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முடியாவிட்டாலும், ஊக்கப்படுத்துகின்ற வகையில் அவர்களுக்குத் தேவையான பனியன்—உல்லன் மப்ளர் போன்றவைகளை அனுப்பிவைக்கத் தீர்மானித்திருக்கிறோம்; சென்னையிலுள்ள அதிகாரிகள் மூலம் இவைகள் இராணுவ வீரர்களுக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பிவைக்க இயலும் என நம்புகிறேன்.

"சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலிருந்து நாள்தோறும் நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள், போர்க்களம் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள்; அவர்களுக்காக இரயில் நிலையத்தில் ஒரு 'கேன்டீன்' ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்; இராணுவ வீரர்களுக்கு இங்கு பிஸ்கட்டும்—தேநீரும் இலவசமாக வழங்கப்படும்.

"மாநிலச் செயற்குழு ஒன்று அமைத்து—அதன் மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பெரிய இரயில் நிலையங்களில் இதுபோன்ற 'கேன்டீன்'கள் அமைக்கப்படும்.

இராணுவ வீரர்களுக்குக் குருதிக் கொடை வழங்கத் தமிழ்நாட்டில் ஏராளமானவர்கள் முன் வருகிறார்கள்; அவர்களிடம் இருந்து குருதியைப் பெற்று—அந்தக் குருதியைக் 'குரூப்' வாரியாகப் பிரித்து வைத்துத் தேவைப்படும்போது உடனடியாக வழங்கப்படும்.

போர் நிதிக்கு உதவி

முதலமைச்சர் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 2,001 வழங்கப்பட்டது; இதனை, தமிழ அரசு தலைமைச் செயலாளர் சபாநாயகம் பெற்றுக்கொண்டார்.

தஞ்சை மாவட்டத்தில் கோடை பருத்தி சாகுபடி

தஞ்சை, டிச. 8—

"தஞ்சை மாவட்டத்தில், தஞ்சை—மாயூரம்—கும்பகோணம் ஆகிய வேளாண்மை வட்டங்களிலும், நன்னிலம், நாகப்பட்டினம் ஆகிய வட்டங்களில் சில பகுதிகளிலும் சம்பா அறுவடை முடிந்தவுடன் பிப்ரவரியில், கோடை பருத்திச் சாகுபடி செய்யப்படும்; இந்தத் திட்டத்தில் சேரும் விவசாயிகளுக்கு ரூ. 40 கடனுதவி அளிக்கப்படும்"

என்றும் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டக் கூட்டு இயக்குநர் ஏ. வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

விரைந்து முன்னேறுகிறது பாரதப் படை

வீழ்ச்சிக்குமேல் வீழ்ச்சியைத் தழுவுகிறது பாகிஸ்தான்

டாக்காவில் விடுதலைக் கொடி பறக்கும் நாள் நெருங்குகிறது

புதுடில்லி, டிச. 8-

வங்க தேசத்தில் ஜெஸ்சூர், சில்ஹெட் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு இந்திய இராணுவம் நேற்று பல வியக்கத்தக்க வெற்றிகளைப் பெற்றிருக்கிறது; மிக விரைவில் கோமில்லாப் பகுதியும் வீழ்ந்துவிடும் என்றும், இந்தியத் துருப்புக்களின் அடுத்த குறிக்கோளான டாக்காவில் இந்த வார இறுதியில் வங்க தேச சுதந்தரக்கொடி பறக்க விடப்படும் என்றும் நம்பப்படுகிறது.

ஆனால் பாகிஸ்தானும் தனது முழுச் சக்தியைப் பயன்படுத்தி மேற்கு முனைகளில்--குறிப்பாக சாம்ப் பகுதியில் ஓர் இடத்தில் இந்தியத் துருப்புக்களைப் பின்வாங்கச் செய்துவிட்டது.

சாம்ப் பகுதியில் சுமார் 60 சதுரமைல் பரப்பளவைப் பாகிஸ்தான் கைப்பற்றியிருப்பதாகச் செய்தி ஒன்று கூறுகிறது; ஆனால் இதற்குப் பாகிஸ்தான் பட்டிருக்கின்ற சேதம் மிக அதிகமானதாக இருந்தது.

மேற்கும் பகுதியில் மட்டும் பாகிஸ்தானுக்கு 116 டாங்கிகள் இழப்பு ஏற்பட்டிருக்கிறது; கிழக்குப் பகுதியில் இது 22.

மேலும் கராச்சி, சிட்டகாங், காக்ஸ் பசார், சல்னா, குல்னா, மங்களா ஆகிய பாகிஸ்தான் துறைமுகங்கள் இன்னும் நீண்டகாலத்துக்கும் பயன்படுத்த முடியாதபடி சேதமடைந்திருக்கின்றன.

சாம்ப் பகுதி தவிர ஏனைய எல்லா முனைகளிலும் இந்திய இராணுவம் மணிக்கு மணி முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

வங்கதேச அரசின் தலைநகரம்

விரைவில் டாக்காவுக்கு மாறும்

கல்கத்தா, டிச. 8-

"விடுதலையடையவிருக்கும் வங்க தேசத்தின் தலைநகரம் டாக்காவாகத்தான் இருக்கும்" என்று, வங்க தேசத் தூதரகத் தலைவர் உசேன் அலி தெரிவித்தார்.

"இப்போதைய முஜிபுர் நகர், நடமாடும் தலைநகரம் போன்ற ஒன்றுரும்" என்றார் அவர்.

"போர் நின்று சிவில் நிர்வாகம் அமைக்கப்பட்டவுடன், தலைநகரம் டாக்காவுக்கு மாற்றப்படும்" என்றார் அவர்.

விரைவிலேயே தமது தூதரகம் புதுடில்லிக்கு மாற்றப்படும் என்றும், தனது தூதுவரை வங்க தேசத்துக்கு இந்தியா விரைவில் அனுப்பிவைக்கும் என்று நம்புவதாகவும் உசேன் அலி கூறினார்.

நிக்சனின் கண்மூடித்தனப் போக்கு

செனட்டர் எட்வர்டு கென்னடி கண்டனம்

முன்னாள் பிரிட்டிஷ் தலைமையமைச்சரும் சாடுகிறார்

வாஷிங்டன், டிச. 8—

"என்றும் போலவே அமெரிக்கா தொடர்ந்து பாகிஸ்தானின் நண்பனாகவே இருந்து வரும்" என்று குடியரசுத் தலைவர் நிக்சன் நேற்று அமெரிக்காவில் புதிதாகப் பதவியேற்க வந்த பாகிஸ்தான் தூதுவரை வரவேற்றுப் பேசுகையில் கூறினார்.

எட்வர்ட் கென்னடி தாக்கு

பாகிஸ்தானின் அக்கிரம நடவடிக்கைகளுக்குத் துணை நிற்கும் அதிபர் நிக்சனின் செயலை, செனட்டர் எட்வர்டு கென்னடி கடுமையாகக் கண்டித்துள்ளார்.

"இப்போதைய நெருக்கடி நிலைமைக்குப் பாகிஸ்தானே காரணம்" என்று கூறிய கென்னடி, 'இப்போது இந்தியாவைக் குறைகூறும் அமெரிக்க நிர்வாகம், கடந்த 8 மாதங்களாகப் பாகிஸ்தான் இராணுவ ஆட்சி கிழக்கு வங்க மக்களைப் படுகொலை செய்துகொண்டிருந்த போது ஏன் வாய்மூடியிருந்தது' என்று வினவினார்.

முன்னாள் பிரிட்டிஷ் தலைமையமைச்சர் கண்டனம்

"இப்போதைய நெருக்கடிக்கு இந்தியாவே காரணம்" என்று கூறும் அமெரிக்காவின் செயலை முன்னாள் பிரிட்டனின் தலைமையமைச்சரும்--இப்போதைய எதிர்க் கட்சித் தலைவருமான வில்சன், 'முட்டாள்தனமானது' என்று கருத்தறிவித்தார்.

சைப்ரஸ் நாட்டின் ஆதரவு

நிகோசியா, டிச. 8—

இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்து சைப்ரஸ் குடியரசுத் தலைவர் மகாரியஸ் செய்தி ஒன்று அனுப்பியிருக்கிறார்.

தலைமையமைச்சர் இந்திரா காந்தி அனுப்பிய கடிதத்துக்கு அனுப்பிய பதிலில்தான் அவர் இதைத் தெரிவித்திருக்கிறார்.

அரபு நாடுகளின் நிலை

துணைக் கண்டத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில் பெரும்பாலான அரபு நாடுகள் பாகிஸ்தானுக்கு ஆதரவாகவே இருந்துவருவதாகத் தெரியவருகிறது.

குறிப்பாக சவூதி அரேபியா, லிபியா, மொராக்கோ, டுனீசியா, குவைத் ஆகியவை பாகிஸ்தானுக்காகவே வாதாடி வருகின்றனவாம்.

ஆயினும் சில நாடுகள் நடுநிலை வகித்துவருகின்றன; 'இந்தியா -- பாகிஸ்தான் நெருக்கடி, அரபு -- இஸ்ரேல் பிரச்சினையிலும் எதிரொலிக்குமோ' என்று பல அரபு நாடுகள் அஞ்சுகின்றனவாம்.

பாவம்--பாகிஸ்தான் விமானிகள்

குறிவைத்துச் சுடுவதற்கும் இலாயக்கில்லை!

ஸ்ரீநகர், டிச. 8—

குறி வைத்துத் தாக்குவதில் பாகிஸ்தான் விமானிகள் மிகவும் திறமை குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள் என்பது, காஷ்மீரின் முக்கியப் பகுதிகளில் அவர்களின் தாக்குதல் பயன்தராமல் போனதிலிருந்தும், அவர்களுக்கு ஏராளமான சேதம் ஏற்பட்டதிலிருந்தும் தெரியவந்திருக்கிறது.

விமானத்திலிருந்து அவர்கள் வீசிய பல குண்டுகளும் அவர்களின் பகுதிகளிலுள்ள முஸ்லிம்கள் வாழும் கிராமங்களில் வீழ்ந்ததால் பல வீடுகள் நாசமடைந்தன; இதனால் பாகிஸ்தான் இராணுவத்தினர் அம்மக்களின் கோபத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

அரசியல் துறையில் அவர்கள் நிலை என்ன?

இராணுவத் துறையில் தோல்வி ஏற்பட்டிருப்பது மட்டுமன்றி, அரசியல் துறையிலும் பாகிஸ்தானுக்குத் தோல்வியே ஏற்பட்டு வருகிறது.

தடை செய்யப்பட்ட வாக்கெடுப்பு முன்னணித் தலைவர்கள் பலரும் காஷ்மீரில் ஆங்காங்கு அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் குழுக்களுடன் நெருங்கி ஒத்துழைத்து வருகின்றனராம்.

பாகிஸ்தானுடன் விமானப் போக்குவரத்து ரத்து

சோவியத் இரஷ்யா அறிவிப்பு

இரஷ்யாவிலிருந்து பாகிஸ்தானுக்கு விமானப் போக்குவரத்தை நிறுத்திவிட்டதாகப் பாகிஸ்தான் விமானப் போக்குவரத்து நிறுவனம் அறிவித்தது.

ஆனால், புதுடில்லிக்கு விமானப் போக்குவரத்து வழக்கம்போல் நடைபெற்று வருகிறது.

டச்சு விமான நிறுவனம்

டச்சு விமான நிறுவனம், அதன் புதுடில்லி விமானப் போக்குவரத்தை ரத்து செய்துவிட்டது.

கராச்சிக்கான போக்குவரத்தை, அது, கடந்த வாரமே ரத்து செய்துவிட்டது.

நேற்றுவரை 10 இலட்சம் பவுண்டு

பாகிஸ்தானில் இந்தியா வீசிய குண்டுகள்

ஏராளமான எதிரியின் ஆயுதங்கள் அழிக்கப்பட்டன

ஆக்ரா, டிச. 8—

இந்திய விமானப் படை விமானங்கள் இரவும் பகலும் பாகிஸ்தானின் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இதுவரையில் பாகிஸ்தான் இராணுவத் தளங்கள்மீது 10,40,000 பவுண்டு குண்டுகள் வீசப்பட்டிருப்பதாக விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் விமானப் படை முழுவதும் செயலற்றதாக்கப்படும் வரையில் இத்தாக்குதல் தொடரும் என்றும் அவர் மக்களுக்கு உறுதியளித்தார்.

வங்க தேசத்தில் மூன்று இராணுவ விமானத் தளங்கள்மீது இந்திய விமானப்படை தாக்குதல் நடத்திப் பெருத்த சேதத்தை விளைவித்திருக்கிறது. கோமில்லா இராணுவ முகாமில் சேமித்து வைத்திருந்த ஏராளமான ஆயுதக்குவியல் அழிக்கப்பட்டுவிட்டன.

வங்க தேசத்தில் மிஞ்சியிருக்கும் இரண்டு பாகிஸ்தான் சேபர்ஜெட் விமானங்கள் நேற்று திரிபுரா நகர் ஒன்றுமீது நேற்று பறந்ததாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உருக்காலைத் திட்டத்தை இழக்கிறது பாகிஸ்தான்

உதவும் எண்ணத்தைக் கைவிடுகிறது இரஷ்யா

கராச்சி, டிச. 8—

கராச்சியில் ஓர் உருக்காலையை அமைத்துத் தருவதாக ரஷ்யா ஏற்றுக்கொண்டிருக்கிறது; இப்போது அந்தத் திட்டத்தை சோவியத் அரசு கைவிடலாம் என்று இங்குள்ள இரஷ்ய வட்டாரங்கள் கூறுகின்றன.

வேலை துவங்குவதற்கான தேதியை ஆறு மாதம் தள்ளிப் போடும்படி பாகிஸ்தான் அரசை இங்குள்ள சோவியத் தூதர் கேட்டிருக்கிறார்.

"மோசமாகிவரும் இப்போதைய நிலவரத்தில் நிபுணர்களையும் --தொழில் திறனாளரையும் அனுப்பிவைக்க இயலாது" என்று இரஷ்யா கருதுகிறது.

'திட்டம் கைவிடப்படலாம்' என்று விவரமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

அனுபவமற்ற தளபதிகள்--- பாகிஸ்தான் அதிகாரிகளே வெளியிடும் தகவல்

ஜம்மு, டிச. 8—

சாம்ப் பகுதியில் சிறைப் பிடிக்கப்பட்ட பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள், தங்களது தலைவர்கள் அனுபவமின்மையால் செயல்பட்டு இராணுவத்தைத் தோல்வியடையச் செய்ததாகப் புகார் தெரிவித்தனர்.

கூண்டோடு பிடிபட்டனர்

கல்கத்தா, டிச. 8—

கோமில்லாப் பகுதியில் நடைபெற்ற போரில் இந்திய இராணுவம், பாகிஸ்தான் இராணுவ ரெஜிமெண்டு ஒன்றின் எல்லா அதிகாரிகளையும் கைது செய்திருக்கிறது.

உயர் பதவிகளை வகிக்கும் இவர்களின் பெயர்களை இந்திய இராணுவம் வெளியிட்டுள்ளது.

ஆயுதத்துக்காக அலைகிறது பாகிஸ்தான்

துருக்கியிடம் கையேந்தல்

அங்காரா, டிச. 8—

பெரும்பாலான தனது போர் ஆயுதங்களை இழந்துகொண்டு வரும் பாகிஸ்தான், தனது நட்பு நாடான துருக்கியிடம் ஆயுத உதவி தருமாறு கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

எதிரியின் இழப்பு--இதுவரை!

கடந்த ஐந்து நாட்களாக நடைபெறும் போரில் இருதரப்புக்கும் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு வருமாறு:—

	பாகிஸ்தான்	இந்தியா
விமானங்கள்	53	22
டாங்கிகள்	138	15 (சாம்ப் பகுதியில்)
கப்பல்கள்	19	ஒன்றுமில்லை
நீர்மூழ்கிக் கப்பல்	1	"

கடந்த 24 மணிநேரத்தில் இந்தியப் படையினர் பாகிஸ்தானின் 49 டாங்கிகளை அழித்திருக்கின்றனர்.

அழிந்துவிட்ட 139 டாங்கிகளில் 116 டாங்கிகள், மேற்குப் பகுதி முனையிலேயே பாகிஸ்தான் இழந்திருக்கிறது.

நேற்று ஒரு எதிரி விமானம் வீழ்த்தப்பட்டதுடன் அந்த எண்ணிக்கை 53 ஆக ஆகிவிட்டது.

கடற்போரில் எதிரிகள் 3 நாசகாரிகளை இழந்திருப்பதுடன், 8 பீரங்கிப் படகுகளையும் இழந்திருக்கின்றனர்; இதன்றி 8 சரக்குக் கப்பல்களை இந்தியக் கடற்படை கைப்பற்றியது.

பாகிஸ்தானுக்கு வெளிநாட்டு விமானங்கள்

சவூதி அரேபியாவிலிருந்து வருகின்றனவாம்

புதுடில்லி, டிச. 8—

பாகிஸ்தானுக்கு சவூதி அரேபியா, இரண்டு 'ஸ்குவாட்ரன்'கள் கொண்ட போர் விமானங்களை அனுப்பியிருக்கிறதாம்.

"சவூதி அரேபியாவிலிருந்து பாகிஸ்தானுக்குப் போர் விமானங்கள் வந்தது பற்றி உறுதியான தகவல் கிடைக்கவில்லை" என்று வெளிவிவகாரத் துறை அதிகாரி ஒருவர் கூறினார்.

சிண்டிகேட் நகராட்சி உறுப்பினர் கழகத்தில் சேர்ந்தார்

பாளையங்கோட்டை, டிச. 2—

பாளையங்கோட்டை நகராட்சி மன்ற சிண்டிகேட் உறுப்பினரான திரு. இ. சுப்பிரமணியம், தமது கட்சியிலிருந்து விலகி, திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளதாக அறிவிக்கிறார்.

இவருடன் சேர்த்து பாளையங்கோட்டை நகராட்சியில் தி.மு.க. உறுப்பினர் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

திரு. சி. சுப்பிரமணியம், கடந்த நகராட்சித் தேர்தலில், அப்போது நகராட்சித் தலைவராக இருந்த திரு. சி. கணபதியா பிள்ளையை எதிர்த்துத் தோற்கடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, ருக்மிணி நாராயண செட்டித் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.